**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதுகுளத்தூர்**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.), முதுகுளத்தூர்.**

**2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.73/2021**
**CNR. NO. TNRM08-000474-2021**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | முதுகுளத்தூர் காவல்நிலையம்<br>குற்ற எண் – 38/2020 |
| எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | முனியசாமி |
| 3. | த/பெ. | வேலு |
| 4. | தொழில் | லேப் டெக்னீசியன் |
| 5. | முகவரி | கீழக்கன்னிச்சேரி,<br>முதுகுளத்தூர் தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 6. | வயது | 35/2020 |
| 7. | சம்பவ நாள் | 14.02.2020 ம் தேதி 13.00 மணி |
| 8. | புகார் தேதி | 16.02.2020 ம் தேதி 14.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | Anticipatory bail granted by The Hon'ble Madurai Bench of Madras High Court in Crl.OP.(MD).No.3208/2022, dt.07.03.2022 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | Surrendered on 17.03.2022 |
| 11. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 23.06.2022 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 12.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | இதச பிரிவுகள் 447, 294(b), 354 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | இதச பிரிவுகள் 447, 294(b), 354 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் |



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:23:11 +0530

| | | |
|---|---|---|
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | <table><tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr><tr><td>அ.சா.1</td><td>27.11.2023</td><td>18.12.2024</td></tr><tr><td>அ.சா.2</td><td>27.11.2023</td><td>18.12.2024</td></tr><tr><td>அ.சா.3</td><td>03.01.2024</td><td>03.01.2024</td></tr><tr><td>அ.சா.4</td><td>08.11.2024</td><td>08.11.2024</td></tr><tr><td>அ.சா.5</td><td>29.01.2025</td><td>29.01.2025</td></tr><tr><td>அ.சா.6</td><td>29.01.2025</td><td>29.01.2025</td></tr></table> |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 05.02.2025 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 311 கு.வி.மு.ச.ன் படியான மனுக்கள் | U/s.311 Crpc petition filed and allowed in Crl.MP. No.6108/2024, dated: 08.11.2024 |
| 20. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 320(ii) கு.வி.மு.ச.ன் படியான மனுக்கள் | இல்லை |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு. S. சொக்கேசன் |
| 22. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. M. மகேஷ்வரன் |
| 23. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 12.03.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 12.03.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 354 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து |



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:23:18 +0530

| | | |
|---|---|---|
| | | தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது. இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 03.09.2021ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 12.03.2026ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. மகேஷ்வரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(12.03.2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : –**

1) கடந்த 14.02.2020ம் தேதி 13.00 மணியளவில் நிகர்நிலைபுகார்தாரரான பிரேமலதா அவரது வீட்டில் தனியாக இருந்தபோது இவ்வழக்கின் எதிரி வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து புகார்தாரரின் சேலையை பிடித்து இழுத்து மானபங்கப்படுத்த முயற்சி செய்தும், புகார்தாரரை அவதூறான வார்த்தைகள் கூறி திட்டியும் பெண்ணுக்கு எதிரான வன்கொடுமை செயலில் ஈடுபட்டதாக எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 354 மற்றும் பிரிவு 4 of TNPHW Actன் கீழ் முதுகுளத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:23:24 +0530

3) எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 354 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். வழக்காவணங்களை பரிசீலித்தும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், முதல் நோக்கு வழக்கு இருந்த காரணத்தினால், எதிரியின் மீது இதச பிரிவுகள் 447, 294(b), 354 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் குறிப்பான குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போதும் எதிரி அவர் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(b)ன் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>5) அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

i) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் அசா.1 நிகர்நிலைபுகார்தாரர் ஆவார். இவர் சம்பவம் குறித்தும், காவல்நிலையத்தில் எதிரி மீது புகார் அளித்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அசா.2 அசா.1ன் கணவர் ஆவார். இவர் சம்பவத்தை கேள்விபட்டு வீட்டிற்கு வந்து எதிரியை காவல்நிலையத்திற்கு சென்று ஒப்படைத்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அசா.3 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர் சம்பவத்தை கேள்விபட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அசா.4 பார்வை மகசர் சாட்சி ஆவார். இவர் போலிசார் சம்பவ இடத்தில் விசாரித்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:23:29 +0530

ii) அசா.5 மற்றும் அசா.6 ஆகியோர்கள் புலன்விசாரணை அதிகாரிகள் ஆவார்கள். இவர்களில் அசா.5 சம்பவம் தொடர்பாக அசா.1 அளித்த புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், பின்னர் நிலையத்தில் வழக்கு கோப்பை ஒப்படைத்து சென்றது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அசா.6 மேற்படி வழக்கு கோப்பை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>6) தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

i. எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 354 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7) அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:-**

i) அசா.1 இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். இவரது சாட்சியத்தில் கடந்த 14.02.2020ம் தேதி மதியம் 01.00 மணியளவில் வீட்டில் தனியாக இருந்தபோது எதிரி தனது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சேலையை பிடித்து இழுத்து ஆபாசமாக பேசி தன்னைவிட்டு எதற்காக சென்றாய் என்று கேட்டதாகவும், இதை பார்த்த பக்கத்துவீட்டில் இருந்த லெட்சுமி மற்றும் பிரசில்லா (அசா.3) ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டதாகவும், சம்பவ


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:23:34 +0530

சமயத்தில் அ.சா.1 எதிரியின் முகத்தில் மிளகாய் பொடியை தூவியுள்ளதாகவும், அருகில் இருந்த நபர்கள் அ.சா.1ன் கணவர் டேவிட்பாலுக்கு விபரம் கூறியதால் அ.சா.1ன் கணவர் உடனே வீட்டிற்கு வந்து எதிரியை கையோடு அழைத்துக்கொண்டு முதுகுளத்தூர் காவல்நிலையம் சென்று புகார் **(அ.சா.ஆ.1)** கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அசா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனக்கும், எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை முன்பே இருந்ததாக கூறியுள்ளார். எனவே, அசா.1க்கும், எதிரிக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருவதால் இவரது சாட்சியத்தை வலுசேர்க்கும் விதமாக மற்ற சாட்சிகள் கூறியுள்ளார்களா என்பது குறித்து பரிசீலிப்பது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

iii) அசா.2 சாட்சி அசா.1ன் கணவர் ஆவார். இவரது சாட்சியத்தில் 14.02.2020ம் தேதி வெளியில் இருந்தபோது அசா.1, ஜான்சன் மற்றும் பிரவீன் ஆகியோர் போன் செய்து வீட்டிற்கு வரக்கூறியதால் வீட்டிற்கு வந்ததாகவும், வீட்டிற்கு வெளியே 50 நபர்களுக்கு மேல் கூடியிருந்ததாகவும் அசா.1 சம்பவம் குறித்து அசா.2க்கு தெரிவித்ததாகவும், அதனால் நிலையத்திற்கு அசா.2 தகவல் அளித்ததன்பேரில் போலிசார் அங்கு வந்ததாகவும், பின்பு எதிரியை காரில் அழைத்துக்கொண்டு நிலையத்தில் ஒப்படைத்து புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

iv) மேற்படி, அசா.2 எதிரியை நிலையத்தில் ஒப்படைத்தது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும் புலன்விசாரணை அதிகாரிகளான அசா.5 மற்றும் அசா.6ன் சாட்சியத்தில் அசா.1 மற்றும் அசா.2 எதிரியை நிலையம் அழைத்து வந்து ஒப்படைத்ததாக கூறவில்லை. மாறாக அசா.5ன் சாட்சியத்தில் எதிரி முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, அசா.2 கூறியதுபோல எதிரியை போலிசாரிடம் ஒப்படைத்திருந்தால் போலிசார் அவரை அப்போதே கைது செய்திருக்க வாய்ப்பு உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அசா.2 கூறியபடி புகார்



THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:23:40 +0530

அளித்த அன்றைய தினமே எதிரி காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டாரா என்பது குறித்து அரசு தரப்பில் நம்பத்தகுந்த சாட்சியம் அளிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மற்ற விவரங்களை பொறுத்து இவர் கேள்விநிலை சாட்சி என்பதால் இவரது சாட்சியம் தொடர்பு அற்றது எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

v) அசா.3 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் 16.02.2020ம் தேதி மதியம் 01.00 மணியளவில் தெருவில் சத்தம் கேட்டதால் அந்த சத்தத்தை கேட்டு அசா.1ன் வீட்டிற்கு சென்றபோது கூட்டமாக இருந்ததாகவும், சம்பவம் குறித்து அங்கிருந்தவர்கள் கூறி தெரிந்து கொண்டதாகவும், பின்னர் அசா.1 அவரது கணவரான அசா.2க்கு போன் செய்து வரவழைத்து காவல்நிலையம் சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் கேள்விநிலை சாட்சி என்பதால் இவரது சாட்சியம் ஏற்புடையது அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

vi) அசா.4 பார்வை மகசர் சாட்சியாக சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் கடந்த 16.02.2022ம் தேதி மதியம் 03.00 மணியளவில் முதுகுளத்தூரில் உள்ள ஜாகீர் உசேன் 2வது தெருவில் முதுகுளத்தூர் காவல் நிலைய போலிசார் நின்றுகொண்டு வரைபடம் வரைந்து கொண்டிருந்ததாகவும், அதில் அ.சா.4ம், காளிராஜன் என்பவரும் கையெழுத்து **(அசா.ஆ.2)** செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

vii) இவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் அசா.1ன் வீட்டின் டிரைவராக வேலை செய்து வந்ததாகவும், போலிசாரிடம் இரு கையொப்பங்கள் செய்து கொடுத்ததாகவும், போலிசார் ஜாகீர்உசேன் 2வது தெருவில் வரைபடம் வரைந்ததாகவும், கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்பது தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியத்தை பரிசீலிக்கையில் சம்பவ இடமானது அசா.1ன் வீடு என அசா.1 சாட்சியம் அளித்துள்ள நிலையில் அசா.4 ஜாகீர்உசேன் 2வது தெருவில் போலிசார் வரைபடம் வரைந்ததாக கூறியுள்ளார். மேலும், போலிசாரிடம் இரு


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:23:45 +0530

கையொப்பங்களை செய்து கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால் இவரது இரு கையொப்பங்கள் அடங்கிய ஆவணம் நீதிமன்றத்தில் போலிசாரால் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இவர் அசா.1ன் வீட்டில் ஓட்டுநராக பணிபுரிந்ததாக தெரிவித்துள்ளதால் இவர் அசா.1க்கு சாதகமாக சாட்சியம் அளிக்க வாய்ப்பு உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவரது சாட்சியம் நம்பத்தகுந்தது இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

viii) அசா.5 மற்றும் அசா.6 ஆகியோர்கள் புலன்விசாரணை அதிகாரிகள் ஆவார்கள். இவர்களில் அசா.5 தனது சாட்சியத்தில் கடந்த 14.02.2020ம் தேதி தேரிருவேலி சிறப்பு சார்பு ஆய்வாளராக பொறுப்பு முதுகுளத்தூர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக நிலையப் பொறுப்பில் இருந்தபோது அசா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவுக்கு ரசீது அளித்து பின்பு, புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப 16.02.2020ம் தேதி நிலைய குற்ற எண்.38/2020 இதச பிரிவுகள் 447, 294(b), 354 & 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.3)** பதிவு செய்து பின்பு 16.02.2020 தினமே 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான சச்சின் மற்றும் காளிராஜா ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.4)** வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து அன்றைய தினமே பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரி முன்பிணையில் சென்றதால் கைது செய்யவில்லை என்றும், பின்பு மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

ix) அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 17.02.2020ம் தேதி முதுகுளத்தூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் முதற்கட்ட விசாரணை செய்து அ.சா.6ன் பார்வைக்கு வைத்த முதுகுளத்தூர் குற்ற எண்.38/2020 வழக்கு கோப்பை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பட்டியல் சாட்சிகள் அனைவரும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் அவர்களிடம் கூறிய சங்கதிகளை தன்னிடமும் கூறியதால் மறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கின்

புலன் விசாரணை முடித்து இதச பிரிவுகள் 447, 294(b), 354 and 4 of TNPHW Actன் கீழ் 28.03.2020ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

## 8) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கையில்

i) அ.சா.1 தனக்கும் எதிரிக்கும் ஏற்கெனவே கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக முன்பகை இருப்பதாக கூறியுள்ள நிலையில் இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அசா.3 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், அசா.2 சம்பவத்தை கேள்விபட்டு வீட்டிற்கு வந்து எதிரியை நிலையத்தில் ஒப்படைத்ததாக கூறியுள்ள போதிலும், புலன்விசாரணை அதிகாரிகளான அசா.5 மற்றும் அசா.6 அவ்வாறு எதிரியை பெற்றதாக சாட்சியம் அளிக்காததாலும், போலிசார் சம்பவ இடத்தில் சம்பவம் குறித்து விசாரித்தார்களா என்பது பற்றி நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படாததாலும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

ii) இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 354 மற்றும் பிரிவு 4 of TNPHW Actன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

iii) இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால்


THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:23:56 +0530

கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:24:04 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.பிரேமலதா (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.டேவிட்பால் |
| அ.சா.3 | திரு.பிரசில்லா |
| அ.சா.4 | திரு.சச்சின் |
| அ.சா.5 | திரு.ராஜேந்திரன் (சார்பு ஆய்வாளர்–ஓய்வு) |
| அ.சா.6 | திரு.சக்திவேல் (சார்பு ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 16.02.2020 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 16.02.2020 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | 16.02.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 16.02.2020 | மாதிரி வரைபடம் |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்:–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>குறிப்பு :–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:24:11 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.